**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**

**முன்னிலை:திரு.S.B.சுஜித், B.A.B.L., (Hons)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் வியாழக்கிழமை**

**பட்டிகை வழக்கு எண்.40/2017**

**(CNR.NO:TNRM05-000445-2017)**

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>தங்கச்சிமடம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.124/2016 |

**எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | விக்னேஷ் |
| 3. | த/பெ | : | முனியசாமி |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | 20/44A, காளவாய் தெரு, இராமேஸ்வரம். |
| 6. | வயது | : | -- |

| | | | |
|---|---|---|---|
| 7. | சம்பவ நாள் | : | 30.11.2016-ம் தேதி 18.40 மணி |
| 8. | புகார் தேதி | : | 30.11.2016-ம் தேதி 21.15 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 05.12.2016 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 05.12.2016 ம் தேதி நிலையப் பிணையில் சென்றுள்ளார். |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 10.07.2017 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 06.02.2018 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 03.03.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | பிரிவுகள். 279, 304(A) இதச படி |
| 15. | வினவப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | பிரிவுகள். 279, 304(A) இதச படி |

| | | | |
|---|---|---|---|
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | முதல் விசாரணை / எதிரி தரப்பு குறுக்கு விசாரணை |

| முதல் விசாரணை | எதிரி தரப்பு குறுக்கு விசாரணை |
|---|---|
| அ.சா.1 – 26.02.2019 | அ.சா.1 – 14.08.2024 |
| அ.சா.2– 26.03.2019 | அ.சா.2– 26.03.2019 |
| அ.சா.3– 12.10.2020 | அ.சா.3– 12.10.2020 |
| அ.சா.4 – 13.04.2022 | அ.சா.4 – இல்லை |
| அ.சா.5 – 10.08.2022 | அ.சா.5 – 10.08.2022 |
| அ.சா.6 – 25.09.2024 | அ.சா.6 – இல்லை |
| அ.சா.7 – 16.10.2024 | அ.சா.7 – 16.10.2024 |
| அ.சா.8 – 03.12.2024 | அ.சா.8 – 03.12.2024 |
| அ.சா.9 – 20.12.2024 | அ.சா.9 – 20.12.2024 |
| அ.சா.10 – 25.11.2025 | அ.சா.10 – 25.11.2025 |

| | | | |
|---|---|---|---|
| 18. | எதிரியிடம் பிரிவு 313(i)(b) Crpc/ 351(i)(b) BNSS படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 05.02.2026 |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி/குற்றமுறையிட்டாளார் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 22. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற M.P.No.19/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 05.02.2026 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 23. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.சொக்கேசன் |
| 24. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.A.விமல்ராஜ் |
| 25. | எதிரியின் கூற்று | : | எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 26. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 12.03.2026 |
| 27. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 12.03.2026 |
| 28. | நீதிபதியின் முடிவு | : | **முடிவாக, எதிரி பிரிவுகள். 279, 304(A) இதச படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 248(1) குவிமுச–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் குற்றம்சாட்டப்பட்டவர் எழுதி கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகும் என உத்தரவிடப்படுகிது.** |

இவ்வழக்கு 10.07.2017 தேதியன்று குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் (இனி கீழ் வரும் இடங்களில் **குவிமுச** என்று குறிப்பிடப்படும்) பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.விமல்ராஜ் அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

1.**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**:

கடந்த 30.11.2016 ம் தேதி 18.40 மணிக்கு இவ்வழக்கில் இறந்த ஆரோக்கியசாமி என்பவர் மதுரை To இராமேஸ்வரம் NH 49 ரோட்டில் தங்கச்சிமடம் எல்கைக்கு உட்பட்ட பேக்கரும்பு அப்துல்கலாம் நினைவிடத்திற்கு மேற்கே அனுமான் கோவில் அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடது பக்கமாக (தெற்கு பக்கமாக) TN 65 S 2639 என்ற நம்பர் எழுதப்பட்ட மேற்படி வண்டியின் ஒரிஜினல் நம்பர் TN 65 S 3926 என்ற எண் கொண்ட வெள்ளை நிற TVS SPOT மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது எதிரே மேற்படி ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக இவ்வழக்கின் எதிரி TN 65 H 8410 என்ற எண் கொண்ட TATA ACE மினி வேனை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி ஆரோக்கியசாமி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதியும், மேற்படி வாகனம் மோதியதில் ஆரோக்கியசாமிக்கு தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு இரத்தப்போக்கு அதிகமாகி இறப்பை ஏற்படுத்தி குற்றம் புரிந்ததாக குற்றம்சாட்டப்பட்டவரான எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இந்திய தண்டனை சட்டம், 1860 (இனி கீழ் வரும் இடங்களில் '**இதச**' என்று குறிப்பிடப்படும்) படி தங்கச்சிமடம் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு பிரிவு 204 குவிமுச கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் குற்றம் சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம் சாட்டப்பட்டவருக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு குற்றம் சாட்டப்பட்டவர் மீது பிரிவு 251 குவிமுச படி, பிரிவு 279, 304(A) இதச படி குற்றச்சாட்டு குறித்து விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) குவிமுச கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2, அ.சா.3 கண்ணுற்ற சாட்சிகள், அ.சா.4 சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சி, அ.சா.5 மற்றும் அ.சா.6 பார்வை மகஜர் சாட்சிகள், அ.சா.7 பிரேதத்தை பிரேத விசாரணைக்கு ஆஜர்படுத்திய சாட்சி, அ.சா.8 பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சாட்சி, அ.சா.9 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி, அ.சா.10 புலன் விசாரணை அதிகாரி.

5. <u>**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:**</u>

அ.சா.1 ஜேம்ஸ் நிரஞ்சன் தனது சாட்சியத்தில் தன் தந்தை பெயர் ஆரோக்கியசாமி எனவும், தான் மெக்கானிக்காக பணிபுரிந்து வருவதாகவும், தான் தங்கச்சிமடத்தில் குடியிருந்து வருவதாகவும், விபத்தில் இறந்துபோன ஆரோக்கியசாமி அ.சா.1 ன் அப்பா எனவும், அ.சா.1 ன் அப்பா டாடா ஏஸ் வண்டி அடித்து இறந்துவிட்டதாகவும், கடந்த 2016–ம் வருடம் அ.சா.1 ன் அப்பா இருசக்கர வாகனத்தில் தங்கச்சிமடம் அப்துல் கலாம் சமாதி அருகில் போகும்போது டாடா ஏஸ் வண்டி அடித்ததில் விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், அப்போது அ.சா.1 அந்த வழியாக சென்று கொண்டிருந்ததாகவும், கூட்டமாக ஆள் நின்று கொண்டிருந்ததாகவும், அ.சா.1 சென்று பார்த்தபோது அ.சா.1 ன் தகப்பனார் வாகன விபத்தில் அடிபட்டு தலையில் இரத்தக் காயத்துடன் இறந்து கிடந்ததாகவும், அ.சா.1,

அப்பாவை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் பிரேத அறையில் வந்து சேர்த்ததாகவும், பிரேத பரிசோதனை செய்யப்பட்டதாகவும், அ.சா.1ன் தகப்பனாருக்கு ஏற்பட்ட வாகன விபத்து சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்ததாகவும், புகாரில் காண்பிக்கப்படும் கையொப்பம் அ.சா.1 உடையது தான் எனவும், அந்த புகார் மனு அ.சா.ஆ.1 எனவும், இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 பெனடிக் தனது சாட்சியத்தில் தான் மீன்பிடி தொழில் செய்து வருவதாகவும், தான் தண்ணீர் ஊற்று கிராமம் தங்கச்சிமடத்தில் குடியிருந்து வருவதாகவும், விபத்தில் இறந்துபோன ஆரோக்கியசாமியை தனக்கு தெரியும் எனவும், கடந்த 3 வருடத்திற்கு முன்பு அ.சா.2 இராமேஸ்வரம் கடலில் மீன்பிடித்துவிட்டு தண்ணீர் ஊற்றில் உள்ள வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது அ.சா.2க்கு முன்னால் விபத்தில் இறந்துபோன ஆரோக்கியசாமி அவரது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்ததாகவும், அப்துல்கலாம் சமாதிக்கு அருகில் அனுமார் கோவில் பக்கத்தில் அவர் சென்று கொண்டிருந்தபோது எதிர்புறமாக வந்த டாடா ஏசி வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், ஆட்டோவில் ஆரோக்கியசாமியை ஏற்றிக்கொண்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், அங்கு மருத்துவர் அவரை பரிசோதித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 அந்தோணி இன்னசன்ட் தனது சாட்சியத்தில் தான் தங்கச்சிமடத்தில் குடியிருந் கொண்டு கூலி வேலை செய்து வருவதாகவும், விபத்தில் இறந்து போன ஆரோக்கிய சாமியை அ.சா.3க்கு தெரியும் எனவும், அ.சா.1 யை தனக்கு தெரியும் எனவும், கடந்த 2 வருடத்திற்கு முன்பு தங்கச்சிமடத்திலிருந்து இராமேஸ்வரம் செல்வதற்காக இரு சக்கர வாகனத்தில் அ.சா.3ம் அ.சா.1ம் வந்து

கொண்டிருந்ததாகவும், இரவு 6.30 மணி முதல் 7.00 மணிக்குள்ளாக அப்துல்கலாம் சமாதிக்கு அடுத்து பேக்கரும்புக்கு முன்னால் கோவில் அருகில் வந்து கொண்டிருந்த போது இறந்து போன ஆரோக்கிய சாமி இரு சக்கர வாகனத்தில் இராமேஸ்வரத்திலிருந்து பாம்பனிற்கு வந்து கொண்டிருந்த போது விபத்து நடந்த இடத்தில் பின்னால் வந்த TATA ACE வாகனம் ஆரோக்கிய சாமியின் இரு சக்கர வாகனத்தை முந்தி செல்ல முற்படும் போது தாங்கள் நின்று கொண்டிருந்த 100 மீ தொலைவில் டமார் என்று சத்தம் கேட்டதாகவும், உடனே நாங்கள் வண்டியை நிறுத்தி விட்டு விபத்து நடந்த இடத்தை சென்று பார்த்தபோது ஆரோக்கியசாமி அடிபட்டுக்கிடந்ததாகவும், அவர் தலையில் இரத்தம் வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது அங்கு வந்த போக்கு ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், அவரை மருத்துவமனையில் சேர்த்து விட்டு அ.சா.3 வந்து விட்டதாகவும், பின்னால் அவர் சிகிச்சை பலனின்றி அவர் இறந்து விட்டதாக கேள்விப்பட்டதாகவும், இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் அ.சா.3 ஐ விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 ஜேம்ஸ் அனலின் தனது சாட்சியத்தில் தான் தங்கச்சிமடம் தண்ணீர் ஊற்றில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருவதாகவும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது எனவும், சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை எனவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 பிளமின் தனது சாட்சியத்தில் தான் தங்கச்சிமடம் தண்ணீர் ஊற்றில் குடியிருந்து வருவதாகவும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது எனவும், பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் தன்னுடையது எனவும், அது அ.சா.ஆ.2 எனவும், அதில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 ரெய்மென்ட் தனது சாட்சியத்தில் தான் அக்காள்மடத்தில் வசித்து வருவதாகவும், கடல் தொழில் செய்து வருவதாகவும், கடந்த 01.12.2016ம் தேதி தங்கச்சிமடம் காவல் நிலையத்தில் இருந்தபோது போலீசார் அ.சா.6 யிடம் கையொப்பம் பெற்றதாகவும், பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது எனவும், அது அ.சா.ஆ.3 எனவும், போலீசார் அ.சா.6 யை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 ஜேம்ஸ் கிளிட்டஸ் தனது சாட்சியத்தில் தற்போது இராமேஸ்வரம் கோவில் காவல்நிலையத்தில் தனிப்பிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 01.12.2016ம் தேதி தங்கச்சிமடம் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்தபோது காலை 07.30 மணிக்கு தங்கச்சிமடம் காவல்நிலைய குற்ற எண்.124/2016, பிரிவுகள்.279, 304(A) இதச வழக்கில் இறந்துபோன ஆரோக்கியசாமி என்பவரது பிரேதத்தின் மீது பிரேத விசாரணை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் காவல் ஆய்வாளருடன் பிரேதவிசாரணைக்கு உடனிருந்ததாகவும், அதன்பின்பு காவல் ஆய்வாளரின் உத்தரவுப்படி பிரேத பரிசோதனைக்குவேண்டுதல் கடிதம் கொடுத்து மருத்துவரிடம் பிரேத பரிசோதனை செய்வதற்கு உடனிருந்து அதன்பின்பு பிரேத பரிசோதனையை முடித்து உத்தரவுப்படி உடலை உறவினர்களிடம் ஒப்படைத்ததாகவும், காவல் ஆய்வாளர் அ.சா.7 ஐ விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.8 மோகனகண்மணி தனது சாட்சியத்தில் தற்சமயம் இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் முதுநிலை உறைவிட மருத்துவராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 01.12.2016 தேதியன்று இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது காலை 11.10 மணியளவில் 52 வயதுடைய ஆரோக்கியசாமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக

வந்த தபால் தங்கச்சிமடம் காவல்நிலைய தலைமைக் காவலர் எண்.886 திரு.ஜேம்ஸ் கிளிட்டஸ் என்பவர் மூலம் பெறப்பட்டதாகவும், அதே நாள் காலை 11.30 மணியளவில் பிரேத பரிசோதனை மேற்கொண்டபோது பிரேதமானது அழுகாத நிலையில் இருந்தாகவும், பிரேத விறைப்புத்தன்மை முழுவதுமாக காணப்பட்டதாகவும், ஓர் சாதாரண ஊட்டச்சத்துள்ள ஆண் பிரேதமானது கை மற்றும் கால்கள் பக்கவாட்டில் நீட்டப்பட்ட நிலையில் படுக்க வைக்கப்பட்டிருந்ததாகவும், கண்கள் மூடிய நிலையில் இருந்ததாகவும், வலது காதின் வழியே இரத்தக்கசிவு இருந்ததாகவும், இடது காது, மூக்கு மற்றும் வாயின் வழியே எவ்வித திரவக்கசிவு இல்லை எனவும், தாடைகள் மூடிய நிலையில் வெற்றாக இருந்ததாகவும், கைகள் மூடிய நிலையில் வெற்றாக இருந்ததாகவும், நாக்கு வாயின் உட்புறம் இருந்ததாகவும், வெளிப்புற காயங்கள் காயம் 1) நெற்றியின் நடுப்புறத்தில் பிராண்டல் மற்றும் பெரைட்டல் பகுதியில் சுமார் 10X 2.5 cm மற்றும் மூளையின் ஆழத்தில் ஓர் சிதைந்த காயம் இருந்ததாகவும், காயத்தை திறந்து பார்த்தபோது தலையின் வலது பிராண்டோ பெரைட்டல் எலும்பு உடைந்திருந்ததாகவும், மூளையின் வலது பிரான்டோ பெரைட்டல் பகுதியில் சுமார் 7 X 5 cm அளவில் ஓர் வீக்கக் காயம் இருந்ததாகவும், காயம் எண்.2) தலையின் வலது பெரைட்டல் பகுதியில் 2 X 2 X 1 cm அளவில் ஓர் சிதைந்த காயம் இருந்ததாகவும், காயம் எண்.3) தலையின் வலது பிராண்டல் பகுதியில் 2 X 2 X 1 cm அளவில் ஓர் சிதைந்த காயம் இருந்ததாகவும், காயம் எண்.4) வலது தோள்பட்டையில் 5X3 cm அளவில் ஓர் சிராய்ப்பு காயம் இருந்ததாகவும், காயம் எண்.5) வலது முழங்கையில் 3 X 2 cm அளவில் ஓர் சிராய்ப்பு காயம் இருந்ததாகவும், காயம் எண்.6) வலது கையில் 3x2 cm அளவில் ஓர் சிராய்ப்பு காயம் இருந்ததாகவும், காயம் எண்.7) வலது காலில் டிபியா மற்றும் பிபுலா எலும்புகள் உடைந்த நிலையில் காணப்பட்டதாகவும், மார்பு கூடு திறக்கப்பட்டது. இருதயம் சிவந்திருந்ததாகவும், இருதயத்தின் வலது புற அறை இரத்தம் உறையாத நிலையில் இருந்ததாகவும், இருதயத்தின் இடது புற அறை இரத்தம் உறைந்த நிலையில் இருந்ததாகவும், நுரையீரல்கள் சிவந்திருந்தன. அதில்

குறுக்கு வாட்டில் வெட்டி பார்த்தபோது திரவக்கசிவு இருந்ததாகவும், நாவடி எலும்பு உடையாத நிலையில் இருந்ததாகவும், குரல்வளை உடையாத நிலையில் இருந்ததாகவும், மார்புக்கூடு எலும்புகள் உடையாத நிலையில் இருந்தன. வயிறு திறக்கப்பட்டது. இரைப்பையில் பாதியளவு செரிமானமான உணவுப் பொருள் இருந்ததாகவும், கல்லீரல், மண்ணீரல், கணையம் மற்றும் சிறுநீரங்கள் சிவந்திருந்ததாகவும், குடல் முழுவதுமாக காணப்பட்டதாகவும், குடல் சவ்வுகள் கிழியாத நிலையில் இருந்ததாகவும், சிறுநீரகப்பை வெற்றாக இருந்ததாகவும், இடுப்பு எலும்புகள் உடையாத நிலையில் இருந்ததாகவும், மண்டை ஓடு திறக்கப்பட்டதாகவும், காயங்கள் காயம் எண்.1 ல் உள்ளது போல் காணப்பட்டதாகவும், மூளை மற்றும் மூளை சவ்வுகள் சிவந்திருந்ததாகவும், தண்டுவடம் சிதையாத நிலையில் இருந்ததாகவும், தண்டுவட எலும்புகள் உடையாத நிலையில் இருந்ததாகவும், உடல் உள்ளுறுப்புகள் பாதுகாக்கப்படவில்லை எனவும், இறப்பிற்கான காரணம் இறந்தவர் பிரேத பரிசோதனைக்கு முன் 18 மணி நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள்ளாக முக்கிய உறுப்பான மூளையில் ஏற்பட்ட காயத்தாலும் மற்றும் பல காயங்களினால் ஏற்பட்ட உதிரப்போக்கு அதிர்சியாலும், வாகன விபத்தால் இறந்துள்ளார் என சான்றளித்ததாகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.4 எனவும், ஆய்வாளர் அ.சா.8 ஐ விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.9 கதிர்காமு தனது சாட்சியத்தில் தமிழ்நாடு காவல்துறையில் உதவிஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று பாளையங்கோட்டையில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 30.11.2016 ம் தேதி 21.15 மணிக்கு தங்கச்சிமடம் காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருக்கும்போது இவ்வழக்கின் வாதி ஏர்காடு புதூர் ஆரோக்கிய சாமி மகன் ஜேம்ஸ் நிரஞ்சன் என்பவர் அறிவேன் சாட்சி ஜேம்ஸ் ஆண்டலின் என்பவருடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.124/2016 பிரிவுகள் 279, 304(A)

இதசவாக வழக்கு பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 எனவும், முதல் தகவல் அறிக்கையும், காயச்சான்று மற்றும் இறப்பு சான்றுடன் அறிக்கையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், புலன் விசாரணைக்கு ஒரு நகலை மண்டபம் காவல் ஆய்வாளர் திரு.பெரியசாமி பொறுப்பு தங்கச்சிமடம் அவர்களுக்கு தகவல் சொல்லி மு.நி.கா 733 தேவேந்திரன் என்பவர் மூலம் அனுப்பி வைத்ததாகவும், இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் அ.சா.9 ஐ விசாரணை செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.10 பெரியசாமி தனது சாட்சியத்தில் திருப்பூர் மாநகரத்தில் மத்திய குற்றப்பிரிவு காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 30.11.2016 அன்று மண்டபம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கூடுதல் பொறுப்பாக தங்கச்சிமடம் காவல் ஆய்வாளராக இருந்தபோது தங்கச்சிமடம் காவல் நிலையக் குற்ற எண் 124/2016 சட்டப்பிரிவுகள் 279, 304 ஏ இதச வழக்கில் முதல் தகவல் அறிக்கை உதவி ஆய்வாளர் கதிர்காமு என்பவரால் பதிவு செய்யப்பட்டு அ.சா.10 விசாரணைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பை பெற்று 01.12.2016 ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிளம்மிங், ரைமண்ட் ஆகியோர்கள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார்செய்ததாகவும், பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 எனவும், பட்டியல் சாட்சிகள் ஜேம்ஸ் நிரஞ்சன், ஆண்டனி பெனடிக், ஜேம்ஸ் ஆனலின், பிளமிங் ரைமண்ட் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவுசெய்ததாகவும், அன்றைய தினமே காலை 8.00 மணிக்கு இந்த வழக்கில் இறந்துபோன ஆரோக்கியசாமி என்பவரது பிரேதத்தை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார்செய்ததாகவும், மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 எனவும், பின்பு பிரேத விசாரணையை முடித்து வழக்கில் உண்மையை அறியும் பொருட்டு தலைமைக்

காவலர் 886 ஜேம்ஸ் கிளிண்டஸ் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு இறந்தவரின் பிரேதத்தை உட்படுத்தி அரசு மருத்துவர் திருமதி. மோகனகண்மணி என்பவர் அளித்த பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றேன். பின்பு தனி அலுவலில் சென்ற ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா என்பவர் பணிக்கு திரும்பியதால் வழக்கு கோப்பினை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு புலன்விசாரணையை தொடர்ந்ததாகவும், மேற்படி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா என்பவர் அ.சா.10 உடன் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காரணத்தினாலும் அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் வழக்கு கோப்பை பார்த்து அவருக்காகவும் சாட்சிகள் ஜேம்ஸ் நிரஞ்சன், ஆண்டனி இன்னசன்ட், பெனடிக், ஜேம்ஸ் ஆனலின் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பெற்றுள்ளார். பின்பு இந்த வழக்கில் எதிரி விக்னேஷ் என்பவரை 05.12.2016 ம் தேதி தங்கச்சிமடம் தர்ஹாவில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளதாகவும், 12.12.2016 ம் தேதி எதிரி ஓட்டி வந்த வாகனமான டாடா ஏசிஇ TN 65 H 8410 என்ற வாகனத்தை 24.01.2017 ம் தேதி அன்று இறந்துபோன ஆரோக்கியசாமி ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனமான TN 65 S 2639 TVS Sport என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விஸ்வனாதன் என்பவரது ஆய்வுக்கு உட்படுத்தி அவரிடமிருந்து மேற்படி இரு வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றுள்ளதாகவும், மேற்படி டாடா ஏசிஇ TN 65 H 8410 மற்றும் இருசக்கர வாகனமான TN 65 S 2639 TVS Sport ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 எனவும், பின்பு 13.02.2017 ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விஸ்வநாதன் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திருமதி.மோகனகண்மணி, பிரேத விசாரணைக்கு பிரேதத்தை ஆஜர் செய்த தலைமைக்காவலர் ஜேம்ஸ் கிளிண்டஸ், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் கதிர்காமு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு இந்த வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி விக்னேஷ் மீது இதச பிரிவு 279, 304(A)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கணம்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**Questioning U/s.313(i)(b) Crpc**

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக உள்ளவை குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

**Point for determination**

**7. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 304(A) படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

**இருதரப்பு வாதங்கள்**

8. அரசுத்தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் அ.சா.1 சம்பவம் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், அதனை ஆதரித்து அ.சா.2 முதல் அ.சா.10 வரையானவர்கள் சாட்சியம் அளித்துள்ளதாவும். மேற்சொன்னவர்கள் மூலம் வழக்கு சம்பவம் தொடர்பாக அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக வாதம் சமர்பிக்கப்பட்டது.

9. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 கேள்வியுற்ற சாட்சி என்றும், சம்பவ சமயத்தில் வெளியில் இருந்ததாக சாட்சியமளித்துள்ளார் என்றும், அ.சா.2 பெனடிக் என்பவர் தான் மருத்துவமனையில் இறந்து போன நபரை அனுமதிக்கவில்லையென்று சாட்சியமளித்துள்ளதன் மூலமாக சம்பவ இடத்தில் அவர் இருந்தாரா என்ற சந்தேகமும், போலீசார் விசாரணை வாக்குமூலத்திற்கு முரண்பட்டும் சாட்சியமளித்துள்ளார் என்று சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், அவர் சம்பவ சமயத்தில் இறந்தவரின் மகனே, மனைவியோ மற்ற நெருங்கிய உறவினர்கள் இல்லை என்று சாட்சியமளித்துள்ளதன் மூலமாக அ.சா.3 அந்தோணி இன்னோசன்ட் சம்பவ இடத்தில் இல்லை என்பது நிரூபணமாகிறது என்று வாதிட்டார். மேலும், அ.சா.4 முதல் அ.சா.6 வரையானவர்கள் பிறழ்சாட்சியம் அளித்தும் அ.சா.7 தனக்கு பரிசோதனை எப்போது முடிந்தது என்று தெரியாது என்று சாட்சியமளித்துள்ளதும் மற்றும் அ.சா.8 முதல் அ.சா.10 வரையானவர்களின் குறுக்கு விசாரணை சாட்சியங்களில் முன்னிடப்பட்ட முரண்பாடுகள் ஆகியவைகளின் மூலமாக எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று வாதிடப்பட்டது.

**Appreciation of Evidence**

10. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 என்பவர் சம்பவ சமயத்தில் தான் வெளியில் இருந்ததாகவும், சம்பவத்தைப் பற்றி தனக்கு நேரடியான விபரங்கள் எதுவும் தெரியாது என்றும், எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று சாட்சியமளித்துள்ளதன் மூலமாக அ.சா.1 கண்ணுற்ற சாட்சி இல்லை என்பதும், அவரது சாட்சியம் மூலமாக எதிரியால் ஏற்பட்டுத்தப்பட்டதாக சொல்லப்படும் விபத்து தொடர்பாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது.

11. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக முன்னிடப்பட்ட அ.சா.2 பெனடிக் என்பவர் தனது சாட்சியத்தில் இறந்து போன ஆரோக்கியசாமி அப்துல்கலாம் சமாதிக்கு அருகே அனுமர் கோவிலுக்கு அருகே இருசக்கர வாகனத்தில் சென்றபோது எதிர்ப்புறமாக வந்த TATA ACE வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சேர்த்தபோது இறந்துவிட்டதாக கூறி பின்னர் அடக்கம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையின் போது இறந்தவரின் இருசக்கர வாகனம் இரண்டு அல்லது மூன்று மீட்டர் முன்பாக சென்றதாகவும், தனது வாகனம் மீது மோதவில்லை என்று சாட்சியமளித்துள்ளது சம்பவம் தொடர்பாக முரண்பட்டு அமையப்பெற்றுள்ளது என்று வாதிடப்பட்டது.

12. அ.சா.2–ன் சாட்சியம் மூலமாக TATA ACE வாகனம் ஆரோக்கியசாமி மீது மோதி விபத்து ஏற்பட்டது தெரிய வருகிறது. இருப்பினும், எதிரி தான் TATA ACE வாகனத்தை ஓட்டினார் என்பது தொடர்பாகவோ, எதிரி அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவாக வாகனத்தை இயக்கினார் என்பதை நிரூபிக்கும் வகையிலோ எவ்வித சாட்சியங்களும் அரசுத்தரப்பில் பெறப்படவில்லை. எதிரித்தரப்பில் முன்னிடப்படுவது போல் இரண்டு அல்லது மூன்று மீட்டருக்கு பின்பாக இறந்த ஆரோக்கியசாமியின் இருசக்கர வாகனத்தை பின்தொடர்ந்து இருக்கும்பட்சத்தில் அ.சா.2–ன் இருசக்கர வாகனத்திலும் TATA ACE வாகனம் மோதியிருக்கும் என்பது இந்நீதிமன்றத்தால் அனுமானிக்கப்படுகிறது.

13. மேலும், அ.சா.2 தனது குறுக்கு விசாரணையின் போது தான் இறந்து போன ஆரோக்கியசாமியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை என்றும், இறந்த இடத்தில் இறந்தவரின் நெருங்கிய உறவினர்கள் யாரும் இல்லை என்று சாட்சியமளித்துள்ளது அவரது போலீசார் விசாரணை வாக்குமூலத்தில் இறந்து போன

நபரை அ.சா.1 ஜேம்ஸ் நிரஞ்சன் மற்றும் அ.சா.3 ஆண்டனி இன்னோசன்ட் ஆகியோர் ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு போக்கு ஆட்டோவில் அழைத்துச் சென்றதாக இடம் பெற்றுள்ள வாக்குமூல சங்கதிகளுக்கு முரண்பட்டு அமையப்பெற்றுள்ளது. இது தொடர்பாக அரசுத்தரப்பில் தகுந்த விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. எனவே, அ.சா.2–ன் சாட்சியம் நம்பகத்தன்மையற்ற வகையில் உள்ளது. அரசுத்தரப்பு வழக்கிற்கு வலு சேர்க்கும் வகையில் அமையப்பெறவில்லை.

14. இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 அந்தோணி இன்னோசன்ட் என்பவர் தனது முதல்விசாரணையில் ஆரோக்கியசாமியின் இருசக்கர வாகனத்தில் பின்னால் வந்த TATA ACE வாகனம் முந்திச்செல்ல முற்படும் போது டமார் என்று சத்தம் கேட்டதாகவும், ஆரோக்கியசாமி அடிபட்டு தலையில் இரத்தம் வந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக ஆராய்கையில், ஆரோக்கியசாமி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடது பக்கமாக சென்றபோது எதிரே மேற்கிலிருந்து கிழக்காக வந்த இவ்வழக்கின் எதிரி ஓட்டிய TATA ACE வாகனம் ஹாரன் அடிக்காமல் அஜாக்கிரதையாக ஓட்டி விபத்து மற்றும் இறப்பை ஏற்படுத்தியதாக உள்ள நிலையில் அ.சா.3 மேற்சொன்ன சங்கதிகளுக்கும், போலீசார் விசாரணை வாக்குமூலத்திற்கும் முரண்பட்டு ஆரோக்கியசாமியின் இருசக்கர வாகனத்தை முந்திச்செல்ல முற்படும்போது விபத்து ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ளதன் மூலமாக சம்பவ இடத்தில் அ.சா.3 இருந்தாரா என்பதும், சம்பவத்தை கண்ணுற்றாரா என்பதும் சந்தேகத்திற்குள்ளாகிறது.

15. மேலும், அ.சா.3 குறுக்கு விசாரணையின் போது சம்பவ இடத்தில் தான் மட்டும் தான் இருந்தேன். புகார் என் தம்பி அனில் எழுதினார். ஆரோக்கியசாமி எனது தாத்தா என்று சாட்சியமளித்துள்ளதன் மூலமாக அ.சா.1 ஜேம்ஸ் நிரஞ்சன் என்பவர் சம்பவ இடத்தில் இருந்ததாக அரசுத்தரப்பில் முன்னிடப்படுவது ஏற்கும்படியாக இல்லை.

அ.சா.2 பெனடிக் சம்பவ இடத்தில் அ.சா.3 இருந்தது தொடர்பாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களுக்கு இடையே முரண்பாடுகள் எழுகிறது.

16. இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக முன்னிடப்பட்ட அ.சா.4 ஜேம்ஜ் அனலின் என்பவர் சம்பவத்தைப் பற்றி தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபட சாட்சிகளான அ.சா.5 பிளமிங் மற்றும் அ.சா.6 ரெய்மண்ட் ஆகியோர் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் சாட்சிக் கையொப்பம் பெறப்பட்டதாக சாட்சியமளித்துள்ளனர். எனவே, சம்பவ இடத்தில் போலீசார் விசாரணை மேற்கொண்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யப்பட்டது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை. அ.சா.7 முதல் அ.சா.10 வரையானவர்களின் சாட்சியங்கள் மூலமாக சம்பவம் தொடர்பாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. சம்பவத்திற்கு பிறகு நடைபெற்ற புலன் விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை தொடர்பாகவே முன்னிடப்பட்டுள்ளது. அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களின் சாட்சியங்களில் அமையப்பெற்ற முரண்பாடுகள் தொடர்பாக அ.சா.10 ஆய்வாளர் பெரியசாமி என்பவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டும் அதற்கான தகுந்த விளக்கங்கள் அ.சா.10 என்பவரால் அளிக்கப்படவில்லை.

17. இவ்வழக்கில் ஆரோக்கியசாமி என்பவர் விபத்து மூலமாக இறந்து போனார் என்பது முன்னிடப்பட்டிருந்தாலும், எதிரி அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக தனது வாகனத்தை இயக்கியதன் மூலமாக விபத்து ஏற்பட்டது என்று அரசுத்தரப்பில் எவ்வித சாட்சியங்களும் முன்னிடப்படவில்லை. கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் பொதுநபர் சாட்சிகள் அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்கவில்லை. மேற்சொன்ன சாட்சிகள் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டும் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை.

18. எனவே, கடந்த 30.11.2016ம் தேதி 18.40 மணிக்கு இவ்வழக்கில் இறந்த ஆரோக்கியசாமி என்பவர் மதுரை To இராமேஸ்வரம் NH 49 ரோட்டில் தங்கச்சிமடம் எல்கைக்கு உட்பட்ட பேக்கரும்பு அப்துல்கலாம் நினைவிடத்திற்கு மேற்கே அனுமான் கோவில் அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடது பக்கமாக (தெற்கு பக்கமாக) TN 65 S 2639 என்ற நம்பர் எழுதப்பட்ட மேற்படி வண்டியின் ஒரிஜினல் நம்பர் TN 65 S 3926 என்ற எண் கொண்ட வெள்ளை நிற TVS SPOT மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது எதிரே மேற்படி ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக இவ்வழக்கின் எதிரி TN 65 H 8410 என்ற எண் கொண்ட TATA ACE மினி வேனை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி இறந்த ஆரோக்கியசாமி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதியும், மேற்படி வாகனம் மோதியதில் இறந்த ஆரோக்கியசாமி தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு இரத்தப்போக்கு அதிகமாகி இறப்பை ஏற்படுத்தியதன் மூலமாக பிரிவு.279, 304(A) இதசன் கீழும் குற்றம்புரிந்ததாக தகுந்த சாட்சியங்கள் மூலம் அரசுத்தரப்பில் முன்னிடப்படவில்லை. எனவே அரசுத்தரப்பில் எதிரி மீதான பிரிவு 279, 304(A) இதசவின் கீழ் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பபடவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

19. முடிவாக குற்றம் சாட்டப்பட்டவர் பிரிவு.279, 304(A) இதசன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. குற்றம்சாட்டப்பட்டவர் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

20. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

21. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் 05.12.2016 ம் தேதி கைது செய்யப்பட்டு அன்றைய தினமே நிலைய பிணையில் சென்றுள்ளார்.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.12 16:36:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | ஜேம்ஸ் நிரஞ்சன் |
| அ.சா.2 | – | பெனடிக் |
| அ.சா.3 | – | அந்தோணி இன்னசன்ட் |
| அ.சா.4 | – | ஜேம்ஸ் அனலின் |
| அ.சா.5 | – | பிளமின் |
| அ.சா.6 | – | ரெய்மண்ட் |
| அ.சா.7 | – | ஜேம்ஸ் கிளிட்டஸ் |
| அ.சா.8 | – | மோகன கண்மணி |
| அ.சா.9 | – | கதிர்காமு |
| அ.சா.10 | – | பெரியசாமி |

**(ii) அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 30.11.2016 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 01.12.2016 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 01.12.2016 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 01.12.2016 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 30.11.2016 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 01.12.2016 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | 01.12.2016 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | 01.12.2016 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 12.12.2016 | டாடா ஏசிஇ TN 65 H 8410 மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.10 | 24.01.2017 | இருசக்கர வாகனம் TN 65 S 2639 TVS Sport மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

**(iii) அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை**

**(iv) எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் :**

இல்லை.

**குறிப்பு:**

1. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

3. வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்தார்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.12 16:37:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.